**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.்.பா 25/03/2016**

**(15 JAMADUL AAKHIR 1437 HIJRI)**

# "KHATAM-AN-NABIYYINE AND THE ADVENT OF PROPHETS"

## "காத்தமுன்னபியும், நபிமார்களின் வருகையும்"

**(PART – I)**



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

உலக மக்களுக்கு சலாம் தெரியப்படுத்தியபிறகு தஷ்ஹுதும் தஅவ்வுசும் சூரா அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ் வருமாறு கூறினார்.

அஹ்மதிய முஸ்லீம்களும், சலபி முஸ்லீம்களும் அத்தோடு மற்ற முஸ்லீம் சங்கங்களும் வாத-எதிர்வாதங்கள் நடத்தி வருவதையொட்டி இன்றய என் ஜுமா குத்துபாவின் விஷயம் நபித்துவத்தைக் குறித்தும் காத்தமுன்னபியீன் என்ற உன்னதப் பதவயினைப் பற்றியும் ஆகட்டும் என எண்ணினேன்.

**கடந்த நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)க்கு கிடைத்தது போன்று, இறையருளாகின்ற நபி, ரசூல் எனும் பதவிகள்**

**ஒருதடவையல்ல பல தடவை வெளிப்பாடுகள் வழியாக அல்லாஹ் எனக்கு வழங்கியிருக்கின்றான்.** ஒரு ரசூல் ஒரு நபியுமாகிவிடலாம்.

என்னை படைத்தவன் பல முறை என்னை ரசூல் என அழைத்திருக்கின்றான். தூய தூதர் முஹம்மது (ஸல்) காத்த முன்னபியீன் ஆவார் என நாம் ஒத்துக்கொள்வோமேயானால் அன்னாருக்கு பிறகு மற்றொரு நபியும் உலகில் தோன்றமாட்டார் என நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அதாவது நான் கூறிக்கொள்கின்றேன் பழயதோ புதியதோ ஆன ஒரு நபியும் தோன்ற முடியாது என எனது பகைவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டியதல்லவா? வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக்கொண்டோர்களும் அதை ஒத்துக்கொள்ள வேண்டியதல்லவா? முஹமதின் நபிமார்களைக் குறித்து **கு.ஃ.பிறினால்** அவதுறுகளும் குற்றச்சாட்டுகளும் எழுப்பும் பொழுது அவர்கள் ஒரு விஷயத்தை மறந்துக் கொள்கின்றார்கள். அதாவது முஹம்மது (ஸல்) வின் முழமைப்பெற்ற உம்மத்தை சீரமைத்துக் கொள்வதற்கு கடந்துச் சென்ற ஒரு சமுதாயத்திலிருந்து ஒரு நபியின் வருகையினை அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். இது ஒரு முரண்பாடல்லவா?

ஈசா (அலை) மின் வருகையை அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். மற்றொரு வார்த்தையால் கூறிக்கொண்டால் ரசூல் (ஸல்) விற்கு முன்னால் தோன்றிய நபியான ஒரு நபரைத் தொடர்ந்து வருகின்ற நுபூவத்தில் அவர்கள் நம்பிக்கை கொள்கின்றார்கள். 40 வருடகாலம் கிடைத்த வெளிப்பாடுகளிலும் அவர்கள் ஈமான் கொள்கின்றார்கள் (தூய தூதர் முஹமது (ஸல்) க்கு கிடைத்ததை வி அதிகமான காலம் கிடைத்த வெளிப்பாடுகள்) இவ்வகை நம்பிக்கை முற்றிலும் தவறாகும். காரணம் திருக்குர் ஆன் வசனம் இவ்வகை நம்பிக்கைகளை மறுத்துக் கொள்கின்றது.

**“முஹம்மது (ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களுக்கெல்லாம் முத்திரையாகவும் இருக்கின்றார். மேலும் அல்லாஹ் எல்லா பொருள்கள் பற்றியும் நன்றறிந்தவன்”** (33:41)

கீழ் கூறுகின்ற நபிமொழியில் காணலாம் **“எனக்கு பிறகு நபியில்லை”**

திருக்குர்ஆனையும் திரு ஹதீசையும் முழமையாக நான் அங்கீகரித்து கொள்கின்றேன். திருக்குர்ஆனில் இந்த வசனம் ஒரு மாபெரும் தீர்க்கதரிசனத்தை உட்கொள்கின்றது. எனது எதிராளிகள் அதை கவனித்துக்கொள்ளவில்லை இதனால் அர்த்தமாக்கி கொள்வது, தூய தூதர் முஹம்மது (ஸல்) வின் வ.ஃ.பாத்திற்கு பிறகு இஸ்லாமைத் தவிர்த்து எந்த ஓர் மதத்திலிருந்தும் எந்த ஓர் நபர்களுக்கும் நபித்துவ பதவி எனும் அருள் கிடைப்பதில்லை. அது ஹிந்துக்கள் ஆகட்டும், யூதர்கள் ஆகட்டும், கிறிஸ்தவர்கள் ஆகட்டும், முஸ்லீம் நாமதாரிகளாகட்டும். இந்த உன்னதமான பதவியினை அடைந்துக்கொள்வதற்கான வழி சித்தீகியத் என்ற பாதை மட்டுமாகும். அதாவது தூய தூதர் முஹம்மது (ஸல்) வின் மீதான அன்பின் சுயமாக அலிந்து தன்னை மாய்த்துக் கொள்தல் ஆகும். இந்த பாதையினை தேர்ந்தெடுப்போர்களுக்கு “நிழல் எனும் பிரத்தேகமான பதவி கிடைத்துவிடவும் நபித்துவத்தின் மேலாடையினை அணிந்துக்கொள்வதற்கான பாக்கியம் கிடைத்துவிடவும் செய்கின்றது. அதாவது அவர்கள் தூய

தூதர் முஹம்மது (ஸல்) வின் ஆன்மீக பிரதிபிம்பமாக பரிணமிக்கின்றார்கள். திரு நபி முஹம்மது (ஸல்) மீதான உள்ள பூரணமான நேசத்தால் முஹம்மது (ஸல்) வின் நபிதத்துவத்தின் ஆடை சுயம் அணிந்துக் கொள்ளவும் செய்கின்றனர். இவ்வகையான நபி வாதிக்கு தூய தூதர் முஹம்மது (ஸல்) வை ஒரு எதிராளியாக கண்டு கொள்ள ஒருபொழுதும் இயலாது. காரணம் அன்னாருக்கு கிடைத்த அனைத்து ஆற்றல்களும் அருள்களும் திரு நபி மூலமாகவே கிடைத்தது. ஆகவே அன்னாருக்கு கிடைத்த ஆன்மீக பதவி திரு நபி முஹமது (ஸல்) வின் மகத்துவத்தின் ஒளி மட்டுமாகும் ஒரே நேரம் அன்னாரை முஹம்மது என்றும் அஹ்மது என்றும் கூறிக்கொள்ளலாம். ஆனால் தூய தூதர் முஹம்மது (ஸல்) வின் உன்னதப்பதவியினை வேறெந்த நபருக்கும் அடைய முடிவதில்லை நிழல் நபிக்கும் முடிவதில்லை. காரணம் நிழல் நபி தூதர் முஹம்மது (ஸல்) வின் மகத்துவத்திற்கு கடன்பட்டிருக்கின்றார்கள்.

கீழ்கூறும் திருக்குர்-ஆன் வசனத்தை இவ்வாறும் விளக்கிக் கொள்ளலாம்.

**“முஹம்மது (ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களுக்கெல்லாம் முத்திரையாகவும் இருக்கின்றார்”** (33:41)

முஹம்மது இந்த உலகை சார்ந்த எவருடையவும் தந்தையல்ல. ஆனால் மறு உலகில் அவர் தந்தையாவார். காரணம் விதிநாள் வரையிலும் இறையருள்களை உயிருடன் தக்க வைத்துக்கொள்ளும் ஒரேயொரு நபி அன்னார் மட்டுமே நபித்துவத்தின் பிரதிபலனும் அருள்களும் அன்னாரின் உம்மத்து வழியாக இவ்வுலகிலும் தொடர்ந்து மறுமையிலும் கிடைத்து விடும். கடந்து சென்றதும் இனி தோன்றயிருப்பதுமான அனைத்து நபிமார்களையும் ஒன்றிணைப்பது அன்னார் மூலமாகும். அன்னார் தோன்றுவதற்கு முன் இவ்வுலகில் இறைத்தூதர்கள் தோன்றிக்கொண்டார்கள் என்றால் அது அன்னாரின் வருகைக்கான பாதையினை அமைத்துக்கொள்வதற்கும், இறைவனின் அன்பாளனின் வருகையைக் குறித்து இவ்வுலகிற்கு தெரியப்படுத்திக் கொள்வதற்கும் நற்செய்தி அளிப்பதற்கும் ஆகும். அன்னாரை தவிர்த்து மற்றெவரும் நபிமார்களின் முத்திரையாக தோன்றவில்லை. ஆகவே நபித்துவத்தின் அருள்கள் கிடைப்பதற்கு அன்னார் வழியாக ஒவ்வொரு நபியும் முன்செல்லவேண்டியதாகும்.

**நான் உங்களிடம் கூறுகின்றேன், நானும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களும் உங்களில் வந்த சுதந்திர நபிமார்கள் அல்ல காரணம் நாங்கள் நபிமார்களுக்கெல்லாம் முத்திரையான நுபூவத்துமாக இணைக்கப்பட்டவர்கள் ஆவோம். கலீ.ஃபத்துல்லாவாகவும் முஹ்யித்தீனாகவும் இந்த நூற்றாண்டில் நான் தோன்றியிருக்கின்றேன். மேல்க் கூறிய ஆன்மீக பதவிகளை அல்லாஹ் எனக்கு வழங்கியிருக்கின்றான். காரணம் நான் தூய தூதர் முஹம்மது (ஸல்) வில் என்னை பரிபூரணமாகவும் நுழையச் செய்திருக்கின்றேன். நபிமார்களுக்கெல்லாம் முத்திரை என்ற சொல்லின் பொருள் நிலைநிற்பது இவ்வாறாகும்.** இயேசு

கிறிஸ்துவை போன்ற ஒரு சுதந்திர நபியின் தோற்றம் (முஹம்மது (ஸல்) விற்கு முன் தோன்றிய இஸ்ரவேல் நபியின்) இதன் பொருளுக்கு மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ளும்.

துரதிர்ஷ்டத்தால் இதை கூறிக்கொள்ளாமல் இருக்க முடியாது. இன்றைய முஸ்லீம்கள் தூய தூதர் முஹம்மது (ஸல்) வை நேசிக்கின்றார்கள் என சொல்வதை ஒரு களங்கமற்ற கூற்றாக எண்ண முடியாது. காரணம் அவர்கள் யூதசமூதாயத்தில் தோன்றிய ஒரு நபிக்கு நபி அரசன் முஹம்மது (ஸல்) விற்கு வழங்கிக்கொள்வதை விட மேலாக பெரிய பதவியும் அந்தஸ்தும் வழங்குகின்றார்கள். அன்னாருக்கு முன்னவே ஷரியத்துடன் தோன்றிய நபிமார்களுக்கு முன்தூக்கம் வழங்கி கொள்கின்றனர். இங்கு வரலாறு திரும்பவும் தொடர்கின்றது. ஹஸ்ரத் ஈசா (அலை) மின் வாழ்க்கை காலத்தில் யூதர்கள் எதிர்பாத்துக் கொண்டது எலியா (அலை) அவர்களின் உடல் அளவிலான தோற்றத்தையாகும். ஆனால் ஈஸா (அலை) அவர்களிடம் என்ன கூறினார்? அன்னார் அவர்களை உணரச் செய்ய முயர்ச்சித்ததாவது, எலியா (அலை) ஆகாயத்திலிருந்து அவர்களுக்கு உதவி செய்திட ஒருபொழுதும் இறங்கிக் கொள்ள மாட்டார். உண்மையில் எலியாவிற்கு பதிலாகவே ஹஸ்ரத் யஹ்யா (அலை) அவர்கள், ஹஸ்ரத் எலியாவின் இரண்டாம் வருகையாக தோன்றியது. யஹ்யா (அலை) அவர்கள், எலியா (அலை) அவர்களின் ஆன்மீக பிரதிபலிப்பு ஆவார்.

நபி என்ற வார்த்தையின் பொருளைக் குறித்து சிந்தியுங்கள், இறை சன்னிதியிலிருந்து மறைவான ஞானங்கள் கொண்டு வந்து மக்கள் முன்பாக எடுத்துரைப்பவன் என்றாகும் நபி என்ற வார்த்தையின் பொருள். அவ்வகை அறிவுகளை கூறுகின்ற நபரை நபி எனக்கூறலாம். அதே வேளை அன்னார் ஒரு ரசூலாகவுமிருப்பார். காரணம், அல்லையென்றால் இறை சன்னதியிலிருந்து மறைவான ஞானங்களை அறிந்துக் கொள்ள அன்ருக்கு இயலாது. காரணம் அடுத்த வசனத்தில் கூறப்படுகின்றது. **“அவன் மறைவானவற்றை அறிந்தவன். எனவே தான் மறைந்திருப்பவற்றை அவன் எவருக்கும் வெளியாக்க மாட்டான் தான் பொருந்திக் கொண்ட துதருக்குத்தவிர – எனவே அவருக்கு முன்னும் அவருக்கு பின்னும் பாதுகாவலர்களை நிச்சயமாக நடத்திக் கொள்கின்றான்”** (72:27,28)

திரு தூய தூதர் முஹமது (ஸல்) வின் வ.ஃபாத்திற்கு பிறகு ஒரு நபியும் ஒருபோதும் வருவதில்லை என்ற நம்பிக்கை, அல்லாஹ்வின் அருள்களாகிய வெளிப்பாடுகளிலிருந்தும் இறை உரையாடல்களிலிருந்தும் முஸ்லீம்கள் முழுமையாக நீக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையாக மாறிவிடும். நான் மேல் ஓதிய வசனங்களின் படி அல்லாஹ் அவனது இரகசியங்கள் வெளிப்படுத்தமாட்டான், அவன் தூதர்களுக்கு தவிர. அதனால் எவர் இறைவனின் செய்தியாளர், அவர் ரசூல் ஆவார். தூய ரசூல் முஹமது (ஸல்) வின் வ.ஃபாத்திற்கு பிறகு இனி இறுதிநாள் வரையிலும் புதிய ஷரியத்துடன் ஒரு நபியும் தோன்ற மாட்டார். இந்த இரண்டு வித்தியாசங்களை குறித்து நாம் உணர வேண்டும். தூய தூதர் முஹம்மது (ஸல்) வின் வ.ஃபாத்திற்கு பிறகு வருகின்ற நபிமார்கள், அவர்கள் முஹம்மது (ஸல்) மீது ஆன்மீகமாக

அலிந்து விடுகின்றவர்களாவார்கள் ஆவார்கள். அவர்களை தேர்ந்தெடுப்பதும் அல்லாஹ் ஆவான். அவர்கள் திருநபி (ஸல்) வின் சீடர்களான நபிமார்களாயிருப்பார்கள். நபிமார்களுக்கெல்லாம் முத்திரை என்ற சொல்லின் படி, முஹம்மது (ஸல்) வும், நபி என வாதம் செய்வோர்களும் ஒன்றுக்கொன்று பரிபூர்ணமான ஒரு ஒற்றுமை இருக்க வேண்டும் என்பது தவிர்த்துக்கொள்ள முடியாது. அதாவது தூதர் முஹம்மது (ஸல்) வின் அனைத்து குணங்களும் ஒரு கண்ணாடியென்பது போலவே இந்த வாதியிலும் பிரதிபலித்துக் கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே நபி என கூறிக்கொள்ள முடியும். நபிமார்களின் முத்திரை அப்போது மட்டுமே அன்னாரில் பதிவு செய்யப்படுகிறது. அவ்வாறு தூய தூதர் (ஸல்) வின் பிரதிபலிப்பாக அவர்கள் பரிணமிக்கின்றார்கள். அந்த நபருக்கு சுயமான ஒரு ஆற்றல் இருப்பதில்லை. அனைத்தும் திரு நபி (ஸல்) வின் எதிரொலியாக மாறுகின்றது. அன்னாரை முஹம்மது என்றே கூறலாம்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) மின் உண்மையினை முஸ்லீம் உலகம் பகுத்தறிவதற்கான உதவி அல்லாஹ் புரிவானாக? இந்த நூற்றாண்டில் தோன்றிய இந்த எளியனையும் பகுத்தறிய அல்லாஹ் உதவி புரிவானாக நாங்கள் தோன்றியது நபித்துவத்தின் முத்திரையை அழித்துக்கொள்வதற்கல்ல மாறாக தூய தூதர் முஹம்மது (ஸல்) வின் மஹத்துவத்தையும் சிறப்பான மதிப்பையும் உலகிற்கு முன் மேலும் உறிதிப்படுத்திட ஆகும். நாங்கள் முஹமது (ஸல்) வின் கட்டுப்படுகின்ற தோழர்களாவோம். அல்லாஹ்வின் எல்லையில்லா அருள்களால் மிக வல்லமையுடைய நபியின் ஒளியாகும் எங்களுக்கு கிடைத்துக்கொண்டிருப்பது ஏய் முஸ்லீம்களே உண்மை வெளிப்பட்டிருக்கின்றது. இஸ்லாம், நம் இஸ்லாம் சீரமைக்கப்பட்டிருக்கின்றது. இதன் மகத்தான பாடங்களை எவராலும் எட்டிமிதிக்க முடியாது. இந்த முக்கியமான வேலையில் அல்லாஹ் நமக்கு உதவிபுரிவானாக. இஸ்லாம் ஒரு தீர்வு கட்டத்தை நோக்கி பயணம் மேற்கொள்கின்றது. அல்லாஹ்வின் மிக ஆற்றல் வாய்ந்த உதவியால் நாம் தான் அதை நவீகரித்துக் கொள்ள வேண்டும். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.


**Issued by:**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd.No.A/693)**

**Web. www.jamaat-ul-sahih-al-islam.com**



**Translated by:**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817, 9947181650**